## நட்டஉத்தரவாதம்

**உரிமையை பதிவுசெய்யும் நோக்கத்திற்காக உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) செயல்முறை தொடர்பாக வாடிக்கையாளரால் ஆவணங்களை பதிவேற்றுவதன் மூலம் டயலொக் ஆசியாடா பீ.எல்.சி (நிறுவனம்) இற்கு எதிராக எழுகின்ற ஏதேனும் உரிமைக்கோரிக்காக இந்த நட்ட உத்தரவதம் வாடிக்கையாளரால் வழங்கப்படுகிறது.**

உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்வதற்கு தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதிலும் மற்றும் உரிமையாளர் செயல்முறையைப் பதிவு செய்வதிலும் அவசியமான ஆவணங்ளை சமர்ப்பிப்பதில், பிற்கொடுப்பனவு / முற்கொடுப்பனவு கையடக்க இணைப்பு (ஏற்புடையவாறு*) (“இணைப்பு”) தற்போது எனக்கு உரிமையுள்ளது என்பதோடு அது என்னால் பயன்படுத்தப்படுகிறது, மேலும் இது ஆரம்பத்தில் இருந்து இன்று வரை எனக்குச் சொந்தமாக இருந்து அது என்னாலே பயன்படுத்தப்படுகின்றது. இந்த இணைப்பைத் தொடர்ந்தும் நான் எனக்குரியதாகப் பயன்படுத்துவேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். எனது விபரங்களுடன் சேர்த்து அவைகளின் பதிவுகளை புதுப்பிக்கவும், என்னை இணைப்பின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக சேர்க்கவும் இதன்மூலம் நிறுவனத்திற்கு அறிவுறுத்துகிறேன்.

நிறுவனத்தினால் இணைப்பின் உரிமையை பதிவு செய்வது தொடர்பாக எவரேனும் மூன்றாம் தரப்பினரால் தொடுக்கப்பகின்ற ஏதேனும் தன்மையிலான ஏதேனும் பிணக்கு / உரிமைகோரிக்கைக்காக நிறுவனம் பொறுப்பாக மாட்டாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

நிறுவனத்தால் இணைப்பின் உரிமையைப் பதிவு செய்வதன் விளைவாக ஏற்படுகின்ற இழப்புகள் கிரயங்கள் சேதங்கள் மற்றும் செலவுகள் ஏதேனும் பொறுப்பு மற்றும்/அல்லது ஏதேனும் வகையிலான அல்லது தன்மையிலான தீங்குகளிலிருந்தும் மற்றும் அவற்றுக்கு எதிராகவும் நிறுவனத்தையும் அதன் பின்னுறுபவர்ளையும் மற்றும் சாட்டுதல்காரர்ளையும் நட்ட உத்தரவாதமளிப்பதற்கும் மற்றும் தீங்கிலிருந்து பாதுகாப்பதற்கும் இத்தால் நான் உடன்பட்டு பொறுப்பேற்றுக் கொள்கின்றேன்.